**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3075/ஆ5/2023, நாள்.18.08.2023**

*****

பொருள் பள்ளிக் கல்வி – 2023ஆம் வருடம் தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் 10 வயது முதல் 17 வயது வரையிலான மாணவர்கள் (6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை ) கலந்துக்கொண்டு ஆய்வுகள் சமர்பிக்கவும் வழிகாட்டி ஆசியர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை வேலூர், தமிழ்நாடு அறிவியல் இயக்கக பயிற்சி ஒருங்கிணைப்பாளரின் கடிதம் நாள். 18.08.2023

*****

பார்வையில் காணும் கடிதத்தின்படி இந்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறை, தேசிய அறிவியல் தொழில் நுட்ப மையத்துடன் இணைந்து மாணவர்களிடையே அறிவியல் கண்ணோட்டத்தை ஏற்படுத்தி இளம் விஞ்ஞானிகளை உருவாக்கும் நோக்கத்தோடு 1993ஆம் ஆண்டு முதல் தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டினை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது எனவும், இந்த ஆண்டும் வேலூர் மாவட்டத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு அறிவியல் இயக்கக சார்பாக 10 வயதிலிருந்து 17 வயதிற்குட்பட்ட (6ஆம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும்) பள்ளி மாணவ / மாணவியர்கள் கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பங்கேற்று ஆய்வு கட்டுரைகளை சமர்பிக்கவும் (இந்த ஆண்டு நடைபெறும் மாநாட்டின் மையக்கரு – ஆரோக்கியம் மற்றும் நலவாழ்விற்கான சுற்றுச் சூழல் அமைப்பை புரிந்துக்கொள்ளல் (Understanding Eco System for Health and Well Being) மற்றும் வழிகாட்டியாக ஆசிரியர்களும் கலந்துகொள்ள கோரப்பட்டுள்ளது.

**பயிற்சி நடைபெறும் விவரம்**
**நாள். – 28.08.2023 (திங்கட்கிழமை)**
**நேரம் – காலை 10.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை**
**இடம் – ஸ்ரீ வெங்கடேஸ்வரா அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளி, வேலூர்.**

எனவே, மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு 10 வயதிலிருந்து 17 வயதிற்குட்பட்ட (6ஆம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும்) அனைத்து வகை நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை பள்ளி மாணவர்கள் மற்றும் வழிகாட்டி ஆசிரியர்கள் கலந்துகொள்ள தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பார்வையில் காணும் கடித நகல்

தொடர்பிற்கு – 9865319354

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அனைத்து வகை நடுநிலை /உயர் / மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.

நகல்–

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கையின் பொருட்டு)
2. தலைமையாசிரியர்,
   ஸ்ரீ வெங்கடேஸ்வரா நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளி, வேலூர்
   (போட்டிகள் நடைபெறுவதற்கு போதிய வசதி செய்து தருமாறு
   கேட்டுக்கொள்ளப்படுகிறார். )
3. பயிற்சி ஒருங்கிணைப்பாளர்,
   தமிழ்நாடு அறிவியல் இயக்கம்,
   14, பெல்லியப்பா கட்டிடம், ஆபிஸர்ஸ் லைன், வேலூர் – 1.

A Programm of
National Co-ordinating-Agency
NCSTC-NETWORK, New Delhi
Govt. of India
NCSTC-NETWORK
தமிழ்நாடு அறிவியல் இயக்கம் (TNSF)
வேலூர் மாவட்டம்
எண்.14, பெல்லியப்பா கட்டிடம், ஆபிசர்ஸ் லைன், வேலூர்-632001.

| பேரா. P.அமுதா<br>தலைவர் TNSF<br>94434 46446 | பொறியாளர் T. முனிசாமி<br>செயலர் TNSF<br>63794 44080 | டா. மன்தான்<br>பொருளர் TNSF | K. விஸ்வநாதன்<br>ஒருங்கிணைப்பாளர் NCSC<br>98653 19354 |
|---|---|---|---|

3075/2023 17/08/2023

## தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு - 202
## (NCSC - 2022)
## வழிகாட்டி ஆசிரியர்கள் பயிற்சி முகாம் - 202

ஐயா,

வணக்கம்.

தமிழ்நாடு அறிவியல் இயக்கம், இந்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறை, தேசிய அறிவியல் தொழில் நுட்ப மையத்துடன் இணைந்து மாணவர்களிடையே அறிவியல் கண்ணோட்டத்தை ஏற்படுத்தி இளம் விஞ்ஞானிகளை உருவாக்கும் நோக்கத்தோடு 1993-ஆம் ஆண்டு முதல் தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டினை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது.

இந்த ஆண்டும் வேலூர் மாவட்ட கல்வித்துறையின் அனுமதியோடு 10 வயதிலிருந்து 17 வயதிற்குட்பட்ட (6-ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை) மாணவ, மாணவிகள் இம்மாநாட்டில் பங்கேற்று ஆய்வறிக்கைகளை சமர்ப்பிக்கலாம். மாணவர்களை வழிகாட்டி ஆசிரியர் ஒருங்கிணைப்பார்கள். இந்த ஆண்டு நடைபெறும் மாநாட்டின் மையக்கரு : **ஆரோக்கியம் மற்றும் நலவாழ்விற்கான சுற்றுச் சூழல் அமைப்பை புரிந்துகொள்ளல் (Understanding Eco System for Health and Well Being)** என்ற தலைப்பில் ஆய்வு சம்பந்தமான தலைப்புகளில் (www.ncsc.co.in) 2 மாதம் பள்ளி மாணவர்கள் ஆய்வு செய்து மாவட்ட மாநாட்டில் அதாவது நவம்பர் 2022 சமர்ப்பித்து, இதில் தேர்வுபெறும் மாணவர்கள் NOV 2022 மாநில அளவில் நடக்கும் மாநாட்டில் ஆய்வை சமர்ப்பிப்பார்கள்.

தேர்வு பெறும் மாணவர்கள் தேசிய மாநாட்டில் ஆய்வை சமர்ப்பித்து இந்திய அரசின் அறிவியல் தொழில்நுட்ப நிறுவனம் வழங்கும் இளம் விஞ்ஞானிப் பட்டம் பெறுவார்கள். தேசிய அளவில் பாரத நாட்டின் குடியரசுத்தலைவர் பங்கேற்று விருதுகளை வழங்குவார். எனவே இதற்கான

பள்ளியளவில் 6, 7, 8 –ம் வகுப்பு மாணவர்கள் இளநிலையிலும், 9, 10, 11 –ம் வகுப்பு மாணவர்கள் மேல்நிலையிலும் ஆய்வு சமர்ப்பிப்பார்கள். ஒரு குழுவில் 2 பேர் மட்டும் இருப்பார்கள். ஒரு பள்ளியில் குறைந்தது 5 ஆய்வுக்குழுக்கள் ஆய்வு செய்யலாம். அறிவியலில் ஆர்வம் உள்ள ஆசிரியர்கள், வழிகாட்டி ஆசிரியர்களாக செயல்படுவார்கள். பங்கேற்ற மாணவர்களுக்கும், பங்கேற்ற வழிகாட்டி ஆசிரியர்களுக்கும் மத்திய அரசு அறிவியல் துறை சார்ந்த சான்று கிடைக்கும். இந்த தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டை தமிழ்நாட்டில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் ஒருங்கிணைக்கினறது.

பயிற்சி துவக்க விழாவில் சிறப்பு அழைப்பாளர்கள் பயிற்சியை துவக்கிவைத்து சிறப்புரை ஆற்றுவார்கள்.

எனவே தலைமையாசிரியர்கள் / தாளாளர்கள் / முதல்வர்கள் தங்கள் பள்ளியிலிருந்து அறிவியலில் ஆர்வம் கொண்ட ஆசிரியர்களை பயிற்சி முகாமில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## பயிற்சி நடைபெறும் விவரம்

1) நாள் : 24-08-23 (வியாழன் கிழமை)

நேரம் : காலை 10–00 மணிமுதல் மாலை 4–30 மணி வரை

இடம் : ஸ்ரீ வெங்கடேஸ்ரா மேல்நிலைப்பள்ளி, வேலூர்.

குறிப்பு: 1. மத்திய உணவை ஆசிரியர்களே கொண்டு வர கேட்டுக் கொள்ளப் படுகிறது.
2. பயிற்சியில் தேனீர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
— நன்றி —

செல் : 94434 46448 / 63794 44080 / 98653 19354

தங்கள் பள்ளியிலிருந்து வழிகாட்டி ஆசிரியராக செயல்பட ஆர்வமுள்ள ஒரு (அ) இரு ஆசிரியர்களை பயிற்சி முகாமுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஏற்கனவே அனுபவமுள்ள ஆசிரியர்கள் தகுந்த தலைப்புகளில் மாணவர்களை ஆய்வை மேற்கொள்ள ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

17/08/23

K. விஸ்வநாதன்
பயிற்சி ஒருங்கிணைப்பாளர்
தமிழ்நாடு அறிவியல் இயக்கம்

தமிழ்நாடு அறிவியல் இயக்கம்,
நெ. 14. செல்லியப்பா கட்டிடம்
... வேலூர் - 632 001